# உங்கள் சகோதரர்களைப் பெலப்படுத்துவது எப்படி (18:22, 23; 19:1)

*பவுல், கிறிஸ்துவுக்குள்ளான தமது சகோதரர்களை மிகவும் நேசித்தார். தமது மூன்றாவது ஊழியப்பயணத்தின் தொடக்கத்தில் பவுல், " ...கலாத்தியா நாட்டிலேயும் பிரிகியா நாட்டிலேயும் சுற்றித் திரிந்து, சீஷரெல்லாரையும் திடப்படுத்தி னான்" (அப். 18:23). "ஞானஸ்நானம் எப்பொழுது ஞானஸ் நானமல்ல" என்ற பாடத்தில், "அநேக மாதங்கள் எடுக்கக் கூடிய 1500 மைல்கள் பயணமானது ... மூன்று வசனங்களில்'' லூக்காவினால் முடிக்கப்பட்டதென்று நாம் குறிப்பிட்டோம். அந்த மூன்று வசனங்கள், மற்ற கிறிஸ்தவர்களுடனான நமது உறவுகளில் நமக்கு உதவி செய்ய முடியும், எனவே அவைகளை ஓய்வாகக் காணச் சற்று நேரம் எடுத்துக் கொள்ளுவோம்.*

## அவர்களுடன் நேரத்தைச் செலவிடுங்கள் (18:22, 23)

பவுல் தமது சகோதரர்களுடன் நேரத்தைச் செலவிடுவதை எப்பொழுதுமே மகிழ்ச்சியுடன் அனுபவித்தார். தமது இரண்டாம் பயணத்தின் முடிவில் அவர் மீண்டும் ஒருமுறை சீரியாவின் "அந்தியோகியாவுக்கு" ப் (வ. 22) போய், "சில காலம் சஞ்சரித்தார்" (வ. 23). குளிர்கால மாதங்களில் அவர் அந்தியோ கியாவில் தங்கி, உலகளாவிய தமது ஊழியத்தில் தொடர்ந்து தம்மை உற்சாகப்படுத்திய அந்த சபையாருடன் அவர் ஊழியம் செய்திருக்கலாம். பின்னாளில், அநேகமாக வசந்த காலத்தில், சாலைகள் யாவும் பயணம் செய்ய மறுபடியும் தகுதியானவை களானபோது அவர் "புறப்பட்டு" (வ. 23) தமது மூன்றாவது பயணத்தில் சென்றார்.[1] அப்படிச் சென்றபோது, அவர் தமது

ஒவ்வொரு பயணத்தின் முடிவிலும் அந்தியோகியாவில் இருந்த சகோதரர்களிடத்தில் திரும்பியது போலவே, திரும்பி வரத் திட்டம் வைத்திருப்பார் என்பதில் சந்தேகம் இல்லை. அவர்களிடத்தில் அவர் விடை பெற்றபோது, மறுபடியும் அவர் களைத் தாம் காண்பதற்கு வாய்ப்பிராது என்பதை அவர் அறியவில்லை.

''போய் வருகிறேன்'' என்று நீங்கள் யாருடனாவது சொல்லும் எந்த ஒரு நிகழ்வும் கடைசியானதாக இருக்க முடியும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். ஒருவரை விட்டுப் பிரியுமுன், உங்களுக்கும் அவருக்கும் உள்ள உறவில் (நீங்கள் அவரை/அவளை மறுபடியும் ஒருபோதும் பார்க்க முடியா விட்டால்) உங்களை அவதிக்குள்ளாக்கும் விஷயம் எதுவும் இல்லாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்.

இந்தப் பயணத்தில் தொடக்கத்தில் பவுல் பயணக் கூட்டாளிகளைப் பெற்றிருந்ததாக நமக்குக் கூறப்படவில்லை, ஆனாலும் கூட பவுல் தனியே பயணம் செய்வதை அரிதாகவே தேர்ந்து கொண்டார். எபேசுவில் தீமோத்தேயு இருந்ததாக லூக்கா பின்னர் குறிப்பிட்டார் (19:22); ஒருவேளை அவ்விளம் பிரசங்கியார் கொரிந்துவில் இருந்து வந்து[2] பவுலுடன் இப்பயணத்தைத் தொடங்கியிருக்கலாம்.[3] மேலும் நாம், 2 கொரிந்தியர் நிருபத்தில் இருந்து, எபேசுவில் பவுலுடன் தீத்து இருந்தார் என்று உறுதியாக அறிகின்றோம் (2 கொரி. 2:13; 7:6, 13, 14; 8:6, 16, 23; 12:18); பவுல் அந்தியோகியாவை விட்டுப் புறப்படும்போது, தீத்துவும் அவருடன் இருந்திருக்க வாய்ப்பு உண்டு.[4]

## நீங்கள் எங்கு சென்றாலும், அவர்களைச் சந்தியுங்கள் (18:23)

பவுலும் அவருடைய தோழர்களும் (அவர்கள் யாராயிருந் தாலும்) அந்தியோகியாவை விட்டுப் புறப்படும்போது, பவுலும் சீலாவும் இரண்டாவது பயணத்தில் சென்ற அதே தரை வழியைப் பயன்படுத்தியிருந்தார்கள் (வரைபடத்தைக் காணவும்).[5] அவர்கள் முதலில் சீரியாவில் இருந்து வடக்கிலும், பிறகு மேற்கிலும் சென்று, சிலிசியாவின் வாசல்கள் என்று

*அழைக்கப்படும் சாலையின் வழியே தாருஸ் மலைகளைக் கடந்து சென்று, தெற்கு கலாத்தியாவின் சமபூமியை அடைந் திருப்பார்கள். பிறகு அவர்கள் "கலாத்தியா நாட்டிலேயும் பிரிகியா நாட்டிலேயும்" (அப். 18:23ஆ) வெற்றிகரமாய்க் கடந்து சென்றிருப்பார்கள், அங்கு முதலாம் பயணத்தின்போது நிலைநாட்டப்பட்ட சபைகளை மீண்டும் ஒருமுறை பார்வை யிட்டிருப்பார்கள். அங்கிருந்த கிறிஸ்தவர்கள் எவ்வளவு உறுதியாய் இருந்தார்கள் என்று பார்ப்பது ஒரு அடிப்படை நோக்கமாய் இருந்தது, எனவே பவுலும் அவரது உடன் ஊழியர்களும் "சீஷரெல்லாரையும் திடப்படுத்துவதில்" (வ. 23இ) தங்கள் நேரத்தைச் செலவிட்டார்கள்.*

*பயணத்தின் இந்தப் பாகத்தைப் பற்றி லூக்கா விபரங்கள் கொடுத்திருக்க வேண்டும் என்று நாம் மீண்டும் ஒருமுறை விரும்புகின்றோம். தீமோத்தேயு பவுலுடன் இருந்திருந்தால், அவர் தமது தாயுடன் லீஸ்திராவில் மறுபடியும் கண்ணீரில் நிறைந்து இணைந்ததை என்னால் கற்பனை செய்ய முடிகின்றது. (அவர் உயிரோடிருப்பதைக் கண்டு அநேகமாய் அவள் ஆச்சரியப்பட்டிருக்கலாம்.)*

*கர்த்தருடைய சபையைச் சந்திக்கும் வாய்ப்பு எதையும் பவுல் நழுவ விட்டு விடவில்லை. நாமும் அவற்றை நழுவ விடக்கூடாது.*

## *அவர்களுக்கு உதவுங்கள் (18:22, 23)*

*பவுலின் மூன்றாவது பயணத்தில் அவரது நோக்கம் பற்றி லூக்கா எதுவும் வலியுறுத்தவில்லை,[6] ஆனால் இப்பயணத்தில் பவுல் எழுதிய நிருபங்களில் அது நன்றாய்த் தெரிந்தது: அவர், "எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களுக்குள்ளே இருக்கிற தரித்திரருக்காக" (ரோமர் 15:26) நிதி சேகரித்துக் கொண்டிருந் தார். அவர் கலாத்தியாவைக் கடந்து செல்லுகையில், அந்த நோக்கத்திற்காக "கலாத்தியா நாட்டு சபைகளுக்கு" அவர் "வாரத்தின் முதல்நாள்தோறும் காணிக்கை சேகரிக்கும்படி" திட்டம் செய்வித்தார் (1 கொரி. 16:1, 2). அநேகமாய் அவர் அப்பணத்தைச் சேகரிக்கவும் அதைப் பிறகு எருசலேமில் ஒப்புவிக்கவும் அப்பகுதியிலேயே பிரதிநிதிகளையும் ஏற்படுத்தி*

*யிருப்பார் (1 கொரி. 16:3, 4; அப். 20:4).*[7]

*பவுல் தம்மைக் குறித்துள்ளதைவிட அதிகமாக தமது சகோதரர்களைக் குறித்துக் கவலைப்பட்டார். நாம் நமது சகோதரர்களைக் குறித்துக் கவலைப்படுகின்றோமா?*

## அவர்களிடத்தில் உங்கள் வார்த்தையைக் காப்பாற்றுங்கள் *(18:21; 19:1)*

*கலாத்தியா மற்றும் பிரிகியா நாடுகளில் ஊழியத்தை முடித்த பிறகு, பவுலும் அவருடன் இருந்தவர்களும் மேற்கு முகமாய் எபேசுவை நோக்கிச் சென்றார்கள். எபேசுவில் இருந்த யூதர்களிடத்தில் பவுல் தாம் மறுபடியும் வர முயற்சி செய்வ தாகக் கூறியிருந்தார் (18:21), அந்த வாக்குறுதியை அவர் காத்துக் கொண்டார். இந்த யூதர்கள் ஆபிரகாமுக்குள் பவுலின் சகோதரர்களாய் இருந்தார்கள், அவர் அவர்களைக் கிறிஸ்து வுக்குள் தமது சகோதரர்களாக்கும் நம்பிக்கையில் இருந்தார்.*


*இருதரப்பினரில் ஒருவர் தம்மையே நம்பிக்கைக்குத் தகுதியற்றவராய்க் காண்பிப்பது போல வேகமாக உறவை அழிப்பது வேறு எதுவும் இல்லை. நமது வார்த்தைக்கு நாம் தகுதியுடைய ஆண்களாக மற்றும் பெண்களாக இருப்போம்!*

## முடிவுரை

*இவ்விதமாக, "அப்பொல்லோ என்பவன் கொரிந்து பட்டணத்தில் இருக்கையில்,[8] பவுல் மேடான தேசங்கள் வழியாய்ப் போய்,[9] எபேசுவுக்கு வந்தான்" (19:1அ). பவுல் தமது சகோதரர்களைப் பற்றிய சுத்த மனச்சாட்சியுடன் எபேசு வந்து சேர்ந்தார். அவர் தம்மால் இயன்ற அளவு அவர்களுக்கு உதவி, அவர்களை உற்சாகப்படுத்தியிருந்தார். நம்முடைய வாழ்க்கை யில் நாம் எங்கு வந்திருந்தாலும், இதையே நாம் கூற முடியும் என்று நான் நம்புகின்றேன்.*

குறிப்புகள்

[1]*அநேகமாக அவர் கி.பி. 52 பனிக்காலத்திலோ அல்லது கி.பி. 53 வசந்தகாலத்திலோ புறப்பட்டுச் சென்றிருக்கலாம். [2]சீலா அல்லது தீமோத்தேயு கொரிந்துவை விட்டுப் பவுலுடன் புறப்பட்டுச் சென்றதாக லூக்கா குறிப்பிடவில்லையாதலால் (18:18), பவுல் அவர்களைத் தொடர்ந்து ஊழியம் செய்வதற்குக் கொரிந்துவில் விட்டு வந்திருக்கலாம் என்று முந்திய பாடம் ஒன்றில் கருத்துத் தெரிவித்தோம். [3]இவ்விடத்தில் மற்ற சில சாத்தியக் கூறுகளும் உள்ளன: தீமோத்தேயு கொரிந்துவிலிருந்து தனது தாயைக் காண்பதற்காக லீஸ்திராவுக்குச் சென்றிருந்து, அங்கிருந்து பவுலுடன் மறுபடியும் சேர்ந்திருக்கலாம், அல்லது பவுல் எபேசு சென்று சேர்ந்த பிறகு தீமோத்தேயு கொரிந்துவில் இருந்து கடற்பயணம் செய்து எபேசு வந்திருக்கலாம். [4]லூக்கா ஏன் தீத்துவைப் பற்றி ஒருபொழுதும் குறிப்பிட வில்லை என்பது நடபடிகளின் பெரும் இரகசியங்களில் ஒன்றாகும். தீத்து, லூக்காவின் இனத்தார் என்பது சாத்தியமுள்ள ஒரு விளக்கமாய் இருக்கின்றது. ஏவப்பட்டிராத பாரம்பரிய வரலாற்றின்படி, லூக்காவைப் போலவே தீத்துவும் சீரியாவின் அந்தியோகியாவில் இருந்து வந்தவர் (கலா. 1:21; 2:1ஐக் காணவும்), இந்தப் பயணத்தில் அவர் பவுலுடன் சென்றிப்பார் என்பது இயல்பானதேயாகும். [5]பக்கம் 160 மற்றும் 192ல் காணப்படும் பவுலின் சுவிசேஷப் பயணங்களின் வரைபடங்களை ஒப்பிட்டுப் பார்க்கவும். [6]இந்தப் பயணத்தில் விசேஷமாகப் பணம் சேகரித்தலைப் பற்றிய லூக்காவின் குறிப்பு அப். 24:17ல் மட்டுமே காணப்படுகின்றது. [7]பெரோயா ஊரைச் சேர்ந்த சோபத்தரும், தெர்பையைச் சேர்ந்த காயுவும் பின்னாளில் பவுலுடன் இந்த உபகாரப் பயணத்தில் இணைந்து சென்றனர் (20:4). லீஸ்திராவைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்குத் தீமோத்தேயுவும் உடன் வந்திருந்தார் (20:4). [8]அப்பொல்லோவின் வரலாற்றைப் பற்றி, அப். 18:24-28க்கான ஒரு முந்தின பாடத்தில் காணவும். அப்பொல்லோ சற்றுகாலம் எபேசுவில் ஊழியம் செய்த பிறகு, கொரிந்துவுக்குச் சென்றார் (18:27). [9]பவுல், வழக்கமான வர்த்தகச் சாலைகளின் வழியே சென்று எபேசுவை அணுகவில்லை என்பதை இது சுட்டிக்காட்டுகின்றது. ஓரளவே பிரயாணம் செய்யப் பயன்படுத்தப்பட்ட சாலைகளின் வழியே வடக்கிலிருந்து, அவர் எபேசு வந்து சேர்ந்தார்.*



பவுலின் மூன்றாவது நற்செய்திப் பயணம்

## *பவுலின் மூன்றாவது ஊழியப்பயணம்*

## *(அப். 18:23-21-17)*

*பவுல், கலாத்தியா மற்றும் பிரிகியா நாட்டில் சுற்றித் திரிந்து சீஷர்களைத் திடப்படுத்திய பிறகு, மேடான தேசங்கள் வழியே பயணம் சென்று ❶ எபேசு வரைக்கும் சென்றார் (18:23-28), அங்கு அவர் சுமார் மூன்று ஆண்டுகள் அளவாகப் பிரசங்கித்து, அற்புதங்கள் செய்தார் (19:1-41). அதன் பிறகு அவர் ❷ மக்கெ தோனியா மற்றும் கிரேக்கத்தில் இருந்த சபைகளை (20:1-5) மறுபடியும் சென்று பார்த்தார். மூன்று மாதங்கள் அகாயாவில் இருந்த பிறகு, மறுபடியும் அவர் மக்கெதோனியாவின் வழியே ❸ துரோவாவுக்குக் கடந்து வந்தார் (20:6-12) அங்கே அவர் ஒரு வாரம் தங்கியிருந்தார். அவர் கடற்பயணத்தில் எபேசுவைக் கடந்து வந்தார், ஆனால் எபேசு சபையின் மூப்பர்களை அவர் ❹ மிலேத்துவில் சந்தித்து (20:13-33), அவர்களிடத்தில் கண்ணீருடன் விடை பெற்றார். அவரது குழுவானது ❺ கோஸ், ரோது மற்றும் பத்தாரா வழியாகச் சென்றது (21:1-17). அங்கிருந்து அவர்கள் பெனிக்கே நாட்டிற்குச் செல்லும் ஒரு கப்பலில் ஏறி ❻ தீரு பட்டணத்திற்குப் பயணம் செய்தார்கள். அங்குள்ள சகோதரர்கள் பவுலை எருசலேமுக்குப் போக வேண்டாம் என்று வற்புறுத்தினார்கள். அதன் பிறகு கப்பலானது பித்தொலமாய் பட்டணத்திற்குச் சென்றது. சில நாட்களுக்குப் பின்னர், ❼ செசரியாவில் அகபு என்ற தீர்க்கதரிசி, பவுல் எருசலேமில் புறஜாதியார் கைகளில் ஒப்புவிக்கப்படுவார் என்று எச்சரித்தார். இருந்த போதிலும் பவுல் ❽ எருசலேமுக்கு பயணமானார், அங்கு அவர் மகிழ்ச்சி யுடன் வரவேற்கப்பட்டார் பிறகு கைது செய்யப்பட்டார்.*

## *எபேசுவில் மூன்று ஆண்டுகள்*

*பவுல் "மூன்று வருஷ காலமாய் இரவும் பகலும்" (அப். 20:31) இடைவிடாமல் எபேசியருக்குப் புத்தி சொல்லி வந்ததாகக் கூறினார். அந்த மூன்று ஆண்டு காலமும் நடந்த எல்லாவற்றையும் நாம் அறியாவிட்டாலும், எபேசுவில் பவுல் தமக்குக் கிடைத்த போதிக்கும் வாய்ப்புக்களை, "பெரிதும் அநுகூலமுமான கதவு" (1 கொரி. 16:9) என்று கண்ணோக்கி, தமது ஊழியப் பயணங்களில் வேறு எந்த இடத்தில் தங்கிய*

*தைக் காட்டிலும் மிக அதிகமான காலம் அங்கு தங்கியிருந்தார். அவர் எபேசுவில் செலவிட்ட அந்த நேரங்களின் விளைவாக, "ஆசியாவில் குடியிருந்த யூதரும் கிரேக்கருமாகிய எல்லாரும் கர்த்தராகிய இயேசுவின் வசனத்தைக் கேட்டார்கள்" (அப். 19:10).*

*முதல் மூன்று மாதங்களில், பவுல் ஜெப ஆலயத்தில் இருந்தவர்களிடம் சம்பாஷணை செய்து வந்தார் (அப். 19:8). வழக்கம் போலவே அவர்கள் "இந்த மார்க்கத்தை நிந்தித்த போது" (அப். 19:9), பவுல் யூதர்களின் கூட்டத்தை விட்டு விலகும்படிக் கட்டாயப்படுத்தப்பட்டு, அடுத்த இரண்டு ஆண்டுகளாக திறன்னு என்பவரின் பள்ளியில் போதித்து வந்தார் (அப். 19:10). அப். 19:22ல் "பின்னுஞ் சில காலம்" என்று வார்த்தைகள் சேர்க்கப்பட்டிருப்பதானது, பவுலினால் குறிப்பிடப்பட்ட கால அளவுக்கு ஏறக்குறைய சமமான கால அளவை லூக்கா குறிப்பது பற்றி அறிவிக்கின்றது. பொது வாகவே யூதர்கள் காலங்களை "முழுவட்டமாக" கணக்கிடு வதுண்டு, அதாவது வருடத்தின் பகுதியை அவர்கள் ஒரு வருடம் என்றே கணக்கிடுவதுண்டு. அதாவது 2 1/4 அல்லது 2 1/2 வருடத்தை 3 வருடம் என்பதாக அவர்கள் கூறுவதுண்டு.*